24th January 1961]

Sri K. VINAYAKAM : On the whole are the agricultural conditions obtaining in Russia any better than ours excepting the technical backwardness that is found in our country or the yield from land is any better than what is obtaining in our country?

The Hon Sri M BHAKTAVATSALAM : Land is the same but everything depends on the application of the results of scientific research.

Single teacher schools

*** 154 *Q*.—Sri S. M. ANNAMALAI :** கனம் நிதி அமைச்சர் அவர்கள் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) 1960-ல் வடாற்காடு மாவட்டம் போளூர் தாலுகாவில் எத்தனை ஓராசிரியர் பள்ளிகள் திறக்கப்பட்டன?

(இ) படவேடு, மதுரா, தேவனுங்குளம், ஜவ்வாது மலையிலுள்ள கானமலை கிராமங்களில் பள்ளிகள் திறக்கும் உத்தேசம் உண்டா?

The Hon. Sri C. SUBRAMANIAM : (*a*) Four

(*b*) A single teacher school has been ordered to be opened at Devanankulam. At present there is no proposal to open a school at Kanamalai.

Sri S. M. ANNAMALAI : சார், தேவனுங்குளத்தில் ஓராசிரியர் பள்ளி ஆரம்பிக்க வேண்டுமென்று **D.E.O** முதற்கொண்டு சிபார்சு செய்திருந்தார்கள். அப்படி செய்யப்பட்டும், அங்குள்ள ரீஜனல் இன்ஸ்பெக்டர் பள்ளிக்கூடம் ஆரம்பிக்க வேண்டாமென்று உத்திரவு போட்டிருக்கிறார்கள். தவிர, அதற்குப் பதில் ஓர் ஆரம்பப் பள்ளியை இப்போது சாமந்திபுரத்தில் ஆரம்பித்திருக்கிறார்கள். இதை அமைச்சர் அவர்கள் அங்குள்ள ரிக்கார்டுகளை வரவழைத்து இரண்டு அதிகாரிகளுக்கும் உள்ள கருத்து வேறுபாட்டை அறிந்து, நியாயமான இடத்தில் பள்ளியை ஆரம்பிக்க உத்தரவுபோட முன்வருவார்களா என்று கேட்கிறேன்.

The Hon. Sri C. SUBRAMANIAM : இங்கு இருக்கக்கூடிய தகவலிலே, இம்மாதிரியான தகராறு எதுவும் இருப்பதாக எனக்குத் தெரியவில்லை. அப்படி ஏதாவது இருப்பின், அங்கத்தினர் அவர்கள் குறித்துக் கொடுத்தால், அதுபற்றி பரிசீலனை செய்கிறேன்.

Schools (Javadu Hills)

*** 155 *Q*.—Sri S. M. ANNAMALAI :** கனம் நிதி அமைச்சர் அவர்கள் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

போளூர் தாலுகா ஜவ்வாது மலையில் எத்தனை ஆரம்ப உயர் தரப் பாடசாலைகள் உள்ளன?

The Hon. Sri C. SUBRAMANIAM : There are no higher elementary schools in the Javadu Hills

Sri S. M. Annamalai: ஸார், ஜவ்வாது மலை மீதிருந்து கீழே இறங்கி வரவேண்டுமென்றால், 20 மைலுக்கு மேல் ஆகிறது. தவிர, சரியான ரோடு வசதி கிடையாது. அங்கே இப்போது 5-வது வகுப்பு வரைதான் பள்ளிக்கூடம் இருக்கிறது. ஆகவே அங்கே ஒரு உயர்தர ஆரம்பப் பாடசாலையை ஆரம்பிக்க சர்க்கார் முன்வருமா?

The Hon. Sri C. Subramaniam: அப்படி ஒரு உயர்தர ஆரம்பப் பள்ளியை அங்கு ஆரம்பித்து நடத்துவது அவசியமானால், அதற்கான முயற்சிகள் எடுத்துக் கொள்ளப்பட்டால், அதற்கு சர்க்கார் தனது ஒத்துழைப்பைக் கொடுக்கும்.

Palar

* 156 Q.—Sri K. R. Nallasivam: கனம் பொது மராமத்து அமைச்சர் அவர்கள் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) பாலாற்றுக்குத் தண்ணீர் விடுவது சம்பந்தமான பேச்சு வார்த்தைகள் சமீபத்தில் சென்னை சர்க்காருக்கும் மைசூர் சர்க்காருக்கும் நடைபெற்றதா?

(இ) அப்படியானால் அதன் முடிவென்ன?

The Hon. Sri P. Kakkan: (*a*) No, Sir.

(*b*) Does not arise.

Sri A. A. Rasheed: Will the Government approach the Mysore Government for the release of water to the Palar which is now dry?

The Hon. Sri P. Kakkan: இந்த வருடம் நல்ல மழை பெய்து இருக்கிறது. வெள்ளமும் வந்திருக்கிறது. அதேபோல் எப்படியாவது அவர்கள் கொடுக்காவிட்டாலும், தண்ணீர் வந்து விடுமென்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

Text-books

* 157 Q.—Sri A. A. Rasheed: Will the Hon. the Minister for Finance be pleased to state—

(*a*) whether the Madras State Education Conference held at Madurai has recommended to the Government to drop proposals to publish Text-books; and

(*b*) if so, the action taken thereon?

The Hon. Sri C. Subramaniam: (*a*) Yes, Sir.

(*b*) No action is considered necessary.